DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.17/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.10 P.W.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ரவி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது அவிநாசி மதுவிலக்கு அமலாக்கி பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 07.02.2021 ஆம் தேதி நான் நிலைய அலுவலில் இருந்த போது நேரில் ஆஜரான ராமகிருஷ்ணன் த.பெ கிட்டுசாமி என்பவர் கொடுத்த புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 80/2021 சட்டப்பிரிவு 279,304 ஏ இதச-வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆவணங்களை கணம் நீதிமன்றத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் சாந்தி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் விபத்து ஏற்பட்ட நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்தை நேரடியாக பார்த்த நபர் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகாரில் புகார் கொடுத்தவர் எத்தனை மணிக்கு விபத்து ஏற்பட்டது என்பது குறித்தும் அவர் எப்போது சென்று பார்த்தார் என்பது குறித்தும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் தாரருக்கு விபத்து ஏற்பட்டது குறித்து நேரடியாக தெரியாது என்றாலும் நஷ்ட ஈடு பெற வேண்டி கொடுக்கப்பட்ட புகாரை விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல. இறந்து போன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com.,B.L. ,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.